மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (6.9.2023) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ரூ.1.54 கோடியில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

சேலத்தில் அரசுப் பொருட்காட்சி!

அமைச்சர்கள் கே.என்.நேரு - மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தனர்!

சேலம், செப். 8 -

நகராட்சி நிர்வா கத் துறை அமைச்சர் கே.என். நேரு மற்றும் தமிழ்வ ளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் 06.09.2023 அன்று சேலம், புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட் சித் திடலில் சேலம் அரசுப் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்து, 62 பய னாளிகளுக்கு ரூ.1.54 கோடி மதிப்பிலான பல் வேறு அரசு நலத்திட்ட உத விகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் அமைச் சர் கே.என். நேரு பேசிய தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத் தப்பட்டுவரும் அரசின் திட்டங்களை கடைக்கோ டிப் பகுதி மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகை யில் சேலம் அரசுப் பொருட்காட்சியானது இன்றையதினம் முதல் 45 நாட்கள் நடைபெறும் வகையில் தொடங்கி வைக் கப்பட்டுள்ளது. இப்பொ ருட்காட்சியை சிறப்பாக இங்கு நடத்த ஏற்பாடு செய்துள்ள தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட் டத்திற்கு எண்ணற்ற பல் வேறு திட்டப்பணிகளை தொடர்ச்சியாக அறிவித் துச் செயல்படுத்தி வருகி றார்கள். அந்தவகையில் சேலத்தில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்ப தற்கான இடம் ஒதுக்கப் பட்டு மற்ற ஆயத்தப் பணி கள் நடைபெற்று வரு கின்றன. அதேபோன்று, இளைஞர்களுக்கு அதிக மான வேலை வாய்ப்பு களை அளிக்கும் வகையில் கருப்பூரில் டைடல் மென்பொருள் தொழில் பூங்கா அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வரு கின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத் திட்டப் பணிகளை பொது மக்கள் எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு அரசுத்துறை களை ஒருங்கிணைத்து அர சின் திட்டங்களை விளக் கும் வகையில் பொழுது போக்கு அம்சங்களுடன் கூடிய அரசுப் பொருட் காட்சி தொடங்கப்பட் டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் இப்பொருட் காட்சியினைக் கண்டுக ளித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இவ்வி ழாவில் கூட்டுறவுத் துறை, மகளிர் திட்டம், வேளாண்மை - உழவர் நலத்துறை, தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர் கள் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை என பல்வேறு துறைகளின் சார்பில் 62 பயனாளிக ளுக்கு ரூ.1.54 கோடி மதிப் பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங் கப்பட்டுள்ளது. மேலும், சேலம் மாநகராட்சிக்கென 7 வாகனங்கள் ரூ.94 இலட் சம் மதிப்பீட்டிலும் இன் றைய தினம் வழங்கப்பட் டுள்ளது.

இதனைப் பெறும் பய னாளிகள் தங்கள் வாழ் வின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு மென்மேலும் உயர எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பேசினார்.

இவ்விழாவில் அமைச் சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கி ணங்க, இன்றைய தினம் சேலம் அரசுப் பொருட் காட்சியானது தொடங்கி வைக்கப்பட்டு, வருகின்ற 20.10.2023 வரை தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறவுள்ளன. இப் பொருட்காட்சியினைத் தொடங்கி வைத்துள்ள மாண்புமிகு நகராட்சி நிர் வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்ற நாள் முதல், பல் வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார் கள். குறிப்பாக, மக்களைத் தேடி மருத்துவம், இன்னு யிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், விவ சாயிகளுக்கு புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட பல் வேறு திட்டங்கள் முத் தாய்ப்பாக அமைந்துள் ளன.

தமிழ்நாடு அரசின் பல் வேறு திட்டங்கள், சாத னைகள், செயல்பாடுகளை அனைத்துத் தரப்பு மக்க ளும் அறிந்து பயன்பெறும் வகையில், அரசுப் பொருட் காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட் காட்சிகளில், அரசின் திட் டங்களும், சாதனைகளும் சிறந்த முறையில் மக்களுக் குக் கொண்டு செல்லப்படு கின்றன. கடந்த 2022 ஆண்டு நடைபெற்ற சேலம் அரசுப் பொருட் காட்சியினை 1,58,480 பார் வையாளர்கள் கண்டுகளித் துள்ளனர்.

இப்பொருட்காட்சி யின் மூலம் தமிழ்நாடு முத லமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களைப் பற்றி பொதுமக்கள் எளிதில் அறிந்து கொண்டு பயன் டைய வேண்டுமாய் கேட் டுக்கொள்கிறேன். இவ் வாறு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார் மேகம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்தி ரன், மாநகராட்சி ஆணை யாளர் சீ. பாலச்சந்தர், மாநகர காவல் ஆணையர் திருமதி விஜயகுமாரி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த் திபன், சேலம் வடக்கு சட் டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு. அலர்மேல் மங்கை, மாவட்ட வரு வாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, செய்தி மக்கள் தொடர்புத் துறை யின் இணை இயக்குநர் (நினைவகங்கள்) / கூடுதல் இயக்குநர் (செய்தி மு.கூ.பொ) கு. தமிழ்செல் வராஜன், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வக ணபதி, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சூரமங்கலம் மண்டலக் குழுத் தலைவர் எஸ்.டி. கலையமுதன் மற் றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட் டோர் கலந்துகொண்ட னர்.

மீனவர் விபத்து காப்புறுதித் திட்டத்தில்

205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களுக்கு ரூ.4.10 கோடி!

தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, செப்.8 -

மீனவர் விபத்து காப்புறு தித் திட்டத்தில் 205 மீன வர்/மீனவ மகளிர் குடும் பங்களுக்கு ரூ. 4.10 கோடி தர தமிழ்நாடு அரசு அர சாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளி யிட்டுள்ள அறிக்கையில்; மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசா னது, மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் எதிர் பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற் றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக இறக்கும் மீன வர்களின் குடும்பங்களுக்கு ஒன்றிய அரசால் தேசிய மீன்வள கூட்டுறவு இணை யத்தின் வழியாக மீனவர் குழு விபத்து காப்புறுதி திட் டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் மீனவர் களுக்கான குழு விபத்து காப்புறுதி திட்டம் செயல்ப டாத காலமான 01.06.2020 முதல் 18.10.2021 வரை இறந்த 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களின் துய ரினை போக்கிடும் வகை யில் 18.08.2023 அன்று ராம நாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில் முதலமைச்சர் மீனவர் விபத்து காப்புறுதி திட்டத் தின் கீழ் அக்குடும்பங்க ளுக்கு நிவாரணம் வழங் கிட அறிவிப்பினை வெளி யிட்டுள்ளார்.

அவ்வறிவிப்பினை செய ல்படுத்தும் விதமாக இறந்த 205 மீனவர்/மீனவ மகளிர் குடும்பங்களுக்கு தலா ரூ.2.00 லட்சம் வீதம் ரூ.4.10 கோடிக்கு (ரூபாய் நான்கு கோடியே பத்து லட்சம் மட் டும்) நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி 30.8.2023 அன்று அரசாணை வெளி யிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் பேரூர் தி.மு.க. செயலாளர் எம்.எஸ்.அக்பர் அலி உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அஞ்சலி செலுத்தினார். உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், அன்னவாசல் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கே.எஸ். சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பழைய அரசமங்கலம் கிராமத்தில் அக்ரஹாரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலிருந்து மாதந்தோறும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் பழைய அரசமங்கலம் கிராமத்திற்கு குடிமைப்பொருட்கள் விநியோகம் செய்யும் வகையில் நகரும் நியாய விலைக்கடையினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சியர் க.கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாண்டியன், கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன், பொது மேலாளர் திருச்சி மண்டலம் சக்திவேல், வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் அ.கருணாநிதி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ஜோ.தேவேந்திரன், உதவி பொறியாளர் மா.சதீஷ்குமார், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வகுமார், குன்னம் வட்டாட்சியர் அனிதா உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

அரவக் குறிச்சி ஒன்றியத்தில் - பள்ளியில் காலை உணவு புறக்கணிப்பு!

கரூர் மாவட்ட ஆட்சியரின் நடவடிக்கையால் பிரச்சினைக்குத் தீர்வு!

கரூர், செப். 8 -

காலை உணவு திட்டத்தில் தீண்டாமை கடைப்பிடித்ததையடுத்து கரூர் மாவட்ட ஆட்சிய ரின் நடவடிக்கையால் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

கரூர் மாவட்டம் அர வக்குறிச்சி ஒன்றியம் வேலன்செட்டியூர் ஊராட்சி ஒன்றிய தொடக் கப் பள்ளியில் முதல மைச் சரின் காலை உணவுத் திட் டம் 25.08.2023 அன்று துவங்கப்பட்டது. இப்பள் ளியில் 30 குழந்தைகள் படித்து வருகிறார்கள். மக ளிர் சுய உதவி குழு உறுப்பி னரான சுமதி (அருந்ததி யர்) காலை உணவு சமைத்து வருகிறார். இப் பள்ளியில் பிற பிரிவினரைச் சேர்ந்த பதினைந்து குழந் தைகள் காலை உணவை புறக்கணித்து வந்தனர்.

இது தொடர்பாக 29.08.2023 அன்று மகளிர் திட்ட இயக்குனர் குழந் தைகளின் பெற்றோரை அழைத்து பள்ளியில் எவ் வித பாகுபாடும் இல்லா மல் அனைத்து குழந்தை களும் உணவு உண்ண வேண்டும் என்று தெரிவித் தது தொடர்ந்து 30.08.2023 அன்று இதர பிரிவிலிருந்து இரண்டு குழந்தைகள் மட்டுமே காலை உணவை உட் கொண்டனர்.

தொடர்ந்து 05.09.2023 அன்று மாவட்ட கலெக் டர் பிரபுசங்கர் பள்ளிக்கு திடீர் என சென்று உண வின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றை ஆய்வு செய் தார். மேலும் காலை உணவை உண்ணாத 15 குழந்தைகளின் 10 பெற் றோர்களை விசாரணை செய்து கேட்டபோது ஒரு வர் அந்த பெண் சமைத் தால் தம்முடைய குழந்தை உணவு உண்ணாது என் றும் வேண்டுமென்றால் குழந்தையின் பள்ளி மாற் றுச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதாகவும் கூறி னார்.

அவர் மீது வன்கொ டுமை சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்படும் என எச்சரித்ததை தொடர்ந்து பாலசுப்பிரம ணியன் என்பவர் குழந் தையை காலை உணவு உண்ண அனுப்புவதாக கூறி மன்னிப்பு கோரினார். இதன் அடிப்படையில் வழக்கு தொடுக்காமல் எச் சரித்து விடுவிக்கப்பட்டார்.

மேலும் மீதமுள்ள அனைத்து பெற்றோரும் தங்களது பிள்ளைகளை தொடர்ந்து காலை உணவு உண்ண தாங்கள் அனுப்பு வதாக கூறினர். பள்ளிக ளில் எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாது என்றும் இது தொடர்ந்து கண்கா ணிக்கப்படும் என கலெக் டர் அறிவுரையும் எச்சரிக் கையும் விடுத்தார்.

இந்நிகழ்வின் போது மக ளிர் திட்ட இயக்குனர் சீனி வாசன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுமதி, கரூர் வருவாய் கோட்டாட்சியர் ரூபினா, அரவக்குறிச்சி வட்டாட்சி யர் செந்தில்குமார் உடன் இருந்தனர்.

கலைஞர் நூற்றாண்டு விழா: தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் கருத்தரங்கம்

மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

நலக்குழுவின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, செப். 8 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கருத்தரங் கம் மற்றும் மாவட்ட மாந கர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் குறித்து அக்குழுவின் செய லாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., அறிவித்துள் ளார்.

தி.மு.கழக ஆதிதிராவி டர் நலக்குழு கருத்தரங்கம் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கூட்டம் மாநில முழுவதும் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நடத்தப் பட உள்ளது. இதில் முதலா வதாக கீழ்காணும் மாவட் டங்களில் நடைபெற உள்ளது.

இதில் ஆதிதிராவிடர் நலக்குழு பொறுப்பாளர் கள் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல் வராஜ், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்கயல் விழி செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றவிருக் கின்றனர்.

இன்று (08.09.2023) மாலை 3.00 மணிக்கு - இடம்: மாவட்ட கழக அலு வலகம் தில்லை நகர் திருச்சி, நிகழ்ச்சி: திருச்சி மண்டல, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள், செயல்வீரர்கள் ஆலோ சனை கூட்டம். சிறப்புரை ஆற்றுபவர்கள்: ஆ. கிருஷ் ணசாமி, பி.துரைசாமி

நாளை (09.09.2023) காலை: 9.00 மணிக்கு, இடம்: துவாரகா பேலஸ், மதுரை. நிகழ்ச்சி: கலைஞர் நூற்றாண்டு விழா கருத்த ரங்கம் தலைப்பு: காலத்தை வென்றவர் கலைஞர். சிறப் புரை ஆற்றுபவர்கள்: பீட் டர் அல்போன்ஸ், நாஞ்சில் சம்பத், மு.தென்னவன்

24.09.2023 காலை 9.00 மணிக்கு, இடம்: பூந்த மல்லி, நிகழ்ச்சி: சென்னை மண்டல, மாவட்ட ஆதிதி ராவிடர் நலக்குழு நிர்வாகி கள், செயல்வீரர்கள் ஆலோ சனை கூட்டம். சிறப்புரை ஆற்றுபவர்கள்: ஆ. கிருஷ் ணசாமி, ச. தசரதன்

26.09.2023 காலை 9 மணிக்கு, இடம்: கலைஞர் அறிவாலயம், விழுப்புரம். நிகழ்ச்சி: கலைஞர் நூற் றாண்டு விழா பட்டிமன் றம். சிறப்புரை ஆற்றுபவர்: திண்டுக்கல். ஐ. லியோனி

இதில், அனைத்து மாவட்ட, மாநகர, கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர் வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறி ஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி, தலைவரின் சமூக நீதிமற்றும் மதசார்பின்மை கோட்பாடுகள், கொள்கை கள், செயல்பாடுகள், உள் ளூர் நிகழ்ச்சிகளாக, ஆவ ணப் படங்களாக கருத்த ரங்கமாக, சமத்துவம் போற் றும் சமபந்தி உபசரிப்பாக நடத்துவது குறித்து

இவ்வாறு -ஆ.கிருஷ்ண சாமி எம்.எல்.ஏ. அறிவித் துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

சென்னை, செப். 8 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று(8.09.2023 வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில் படப்பை சி. என்.சி மகாலில் ஒன்றிய கழக அவைத் தலைவர் மு.சுப்ரமணி தலைமையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அண்ணன் தா.மோ.அன்பரசன் சிறப் புரையாற்றிட குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் சரஸ்வதி மனோக ரன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்த கோ பால், இ.மணி, வாசுகிம கேஷ், சி.பார்த்த சாரதி, வி. அரி, மு.ராஜேந்திரன், மா. பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது இக்கூட்டத் தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக செயலாளர் கள், சிறப்பு அழைப்பாளர் கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண் டுமாய் கேட்டுக்கொள்கி றேன். பொருள்: செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, வேலூர் முப் பெரும் விழா, தந்தை பெரி யார் பிறந்த நாள் விழா, கலைஞர் நூற்றாண்டு விழா, பாகம் வாரியாக செயல் வீரர் கூட்டம்

இவ்வாறு படப்பை ஆ.மனோகரன் தனது அறிக் கையில் தெரிவித்து உள் ளார்.

வாக்குச் சாவடி நிலை (BLA 2) பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு தெற்கு மாவட்ட வாக்குச் சாவடி பாகமுகவர்கள் கூட்டம் இன்று (8.9.2023 - வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது. ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட தொகுதிகளுக்கு அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதி பொறுப்பாளர்களுடன் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறும் (BLA 2) பாக முகவர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கழகத்தினர் பங்கேற்க வேண்டும்.

அதில், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் அனைவரும் ஆங்காங்கே நடைபெற உள்ள நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : பாக முகவர்கள் (BLA 2) அனைவரும் அவரவர் தொகுதிகளில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்.

நேரம்	தொகுதி	இடம்
காலை 9 மணி	மொடக்குறிச்சி தொகுதி	உத்தமி பொன்னுசாமி திருமண மண்டபம், சிவகிரி
மதியம் 3 மணி	பெருந்துறை தொகுதி	A TO Z குமார் நந்தவனம் மஹால் NH பைபாஸ், பெருந்துறை
மாலை 6 மணி	கிழக்கு, மேற்கு தொகுதிகள்	தங்கம் மஹால் மேட்டுக்கடை ஈரோடு

அமைச்சர் சு.முத்துசாமி
செயலாளர்
ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.